## இலங்கை தேசிய ஒலிம்பிக் குழு – 2017

இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான வருமான, செலவினக் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினதும் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1993 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க விளையாட்டுத்துறை (திருத்த) அதிகாரச்சட்டத்தின் 9 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. குழுவின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது அவதானிப்புரைகளும் கருத்துரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவக் குழுவின் பொறுப்பு

இந் நிதிக் கூற்றுக்கள் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபார முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்பத் தயாரிக்கப்படுதல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுதல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையானவாறான உள்ளகக் கட்டுப்பாட்டைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களால் எழும் தாக்கங்களைத் தவிர, இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபார முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 2 ஆம் அத்தியாயத்தினது 2.52 ஆம் பந்தியின் பிரகாரம் நியமங்களில் அதிகாரமில்லாதவிடத்து, நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் வருமானத்தையும் செலவினத்தையும் எதிரீடு செய்யலாகாது எனக் குறிப்பிடப்பட்டிருந்தும், மீளாய்வாண்டின்போது நிலையான சொத்து விற்பனையில் ஏற்பட்ட ரூபா 305,406 நட்டமானது ஏனைய வருமானத்தில் எதிரீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான கணக்கீட்டு நியமத்தின் 28 ஆம் அத்தியாயத்தின் 28.15 ஆம் பந்தியின் பிரகாரம் பணிக்கொடைக்கான நிதி ஏற்பாட்டுப் பொறுப்பின் தற்போதைய பெறுமதி இனங்காணப்பட்டிராததுடன், குழுவின் பதவியணியினருக்கு சேவையின் ஆரம்பந் தொட்டு ஒவ்வொரு ஆண்டும் ½ மாத சம்பளத்தின் அடிப்படையில் ரூபா 1,635,112 பணிக்கொடைக்கான நிதி ஏற்பாடாக பொறுப்புகளின் கீழ் கணக்கிலிடப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆசிய ஒலிம்பிக் குழுவிடமிருந்து பெறப்பட்ட ரூபா 3,093,635 நன்கொடையில் கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்கு தேய்மானம் மேற்கொள்ளப்படாமையால் நிலையான சொத்துக்களது தேய்மானம் ரூபா 593,918 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் 2005 ஆம் ஆண்டின்போது தேசிய ஒலிம்பிக் குழு தலைமை அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்ட 01 றூட் 20 பர்ச்சர்ஸ் காணி மதிப்பீடு செய்யப்பட்டு அதன் பெறுமதி கணக்கிலிடப்படவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்கான வருமான வரி நிதியேற்பாடு ரூபா 204,600 குறைவாகக் காட்டப்பட்டமையால் வருமான வரிச் செலவினம் மற்றும் சேர்ந்து நின்ற வருமான வரி என்பவற்றின் பெறுமதி அதேயளவு குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 6,878,916 நிதிக்கூற்றுக்களில் காட்டப்படவில்லை.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் விளையாட்டுத்துறை அமைச்சிலிருந்து பெற வேண்டிய மீதி ரூபா 2,110,949 ஆகும். அமைச்சினது கணக்கின் பிரகாரம் அது ரூபா 926,554 ஆகியமையால் ரூபா 1,184,395 வேறுபாடு நிலவியது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், விளையாட்டு துறை அபிவிருத்தித் திணைக்களத்திடமிருந்து பெற வேண்டிய மீதி ரூபா 640,906 ஆகும். திணைக்களக் கணக்கின்படி அது ரூபா 9,614,817 ஆகியமையால் ரூபா 8,973,911 வேறுபாடு நிலவியது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் கணக்கீட்டு விடயங்களுக்கெதிரே சுட்டிக் காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| | கணக்கீட்டு விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | இலங்கை கூடைப்பந்து சம்மேளனம் தொடர்பான குழுவிற்கு நன்றி செலுத்தும் செயற்திட்டம் | | |
| | (i) கூடைப்பந்துக் கொள்வனவு | 68,000 | |
| | (ii) உணவு மற்றும் நீர் கொள்வனவுச் செலவினம் | 102,000 | விலைகளைக் குறிப்பிடும் சிறு துண்டுகள் |
| | (iii) தங்குமிட வசதி மற்றும் உணவுச் செலவினம் | 831,000 | |
| | (iv) பயிற்சியாளர்களுக்கான கொடுப்பனவு | 220,000 | பணத்தைப் பெற்றுக் கொண்டதை உறுதி செய்யும் பதிவேடு |
| (ஆ) | இலங்கை வொலிபோல் சம்மேளனத்தின் பயிற்சியாளர்களது செயற்திட்டத்திற்கு வழங்கிய தொகை | 264,096 | பணத்தைப் பெற்றுக் கொண்டதற்கான சங்கத்தின் பற்றுச்சீட்டு |
| (இ) | வர்த்தக மற்றும் ஏனைய பெற வேண்டிய மீதி | 352,611 | மீதிகளை உறுதி செய்யும் கடிதங்கள் |
| (ஈ) | வர்த்தக மற்றும் ஏனைய கொடுப்பனவு செய்ய வேண்டிய மீதி | 189,165 | மீதிகளை உறுதி செய்யும் கடிதங்கள் |

| | | | |
|---|---|---|---|
| (உ) | சொத்துக்கள், பொறித்தொகுதி, உபகரணங்கள் | 174,775,158 | வருடாந்த பொருட் கணிப்பு அறிக்கைகள் |
| (ஊ) | சர்வதேச ஒலிம்பிக் குழுவிடமிருந்தும் ஆசிய ஒலிம்பிக் குழுவிடமிருந்தும் ஏனைய நிறுவனங்களிலிருந்தும் பெற்ற மானியம் | 69,447,310 | மானியத்தை உறுதி செய்யும் கடிதங்கள் மற்றும் ரூபா 168,079 க்கான வங்கிச் செலவு அறிவிப்பு |

### 2.3 பெற வேண்டிய கணக்குகளது மீதிகள்

வெளியக தனியார் நிறுவனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 173,603 அறவிடப்படுவதற்கான நடவடிக்கைகள 6 ஆண்டுகளாக நடைபெறாதிருந்தன.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

2006 பொருட் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 4.2.1 மற்றும் 4.2.2 ஆம் பந்திகளின் பிரகாரம், குழுவானது 2017 ஆம் ஆண்டிற்கான பொருட் கொள்வனவுத் திட்டத்தையும் பொருட் கொள்வனவுக் கால அட்டவணையையும் தயாரித்திருக்கவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவினது நிதிப் பெறுபேறு ரூபா 664,763 பற்றாக்குறை ஆகும். இதற்கெதிரான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 3,740,138 ஆகியமையால், மீளாய்வாண்டினது நிதிப்பெறுபேற்றில் ரூபா 4,404,901 நலிவு தென்பட்டது. மீளாய்வாண்டினது செலவினம் ரூபா 88,743,722 குறைவடைந்திருந்தபோதும், வருமானம் ரூபா 93,148,623 குறைவடைந்தமையே மேற்படி நிதிப் பெறுபேற்று நலிவுக்கான பிரதான காரணமாக அமைந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

**(அ) பணிப்புரைக்கமைய செயலாற்றாமை**

இலங்கை தேசிய ஒலிம்பிக் குழு 1937 ஏப்ரல் 08 ஆந் திகதி ஸ்தாபிக்கப்பட்டதுடன், அந்த ஆண்டிலேயே சர்வதேச ஒலிம்பிக் குழுவில் அங்கத்துவத்தையும் பெற்றிருந்தது. 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுத்துறை அதிகாரச்சட்டத்தின் 18 முதல் 21 ஆம் பிரிவுகளின் மூலம் குழுவின் சட்டரீதியான நடவடிக்கைகள் தொடர்பான ஏற்பாடுகள் தயாரிக்கப்பட்டு பின்னர் அந்த ஏற்பாடுகள் இரு சந்தர்ப்பங்களில் திருத்தம் செய்யப்பட்டிருந்தன. 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுத்துறை அதிகாரச்சட்டத்தின் 19 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அதிகாரச்சட்டத்தின் 41 ஆம் பிரிவின் கீழ் அமைச்சரால் அமைக்கப்படும் தேசிய ஒலிம்பிக் குழு சம்பந்தமான பணிப்புரைகளும் திருத்தப் பணிப்புரைகளும் உருவாக்கப்பட்டிருந்தன. 8(அ) இலக்கப் பணிப்புரையின் பிரகாரம், பெறப்படும் சகல உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பணம், உபகரணங்கள் ஏனைய வளங்கள் தொடர்பான மும்மாத அறிக்கைகள் மற்றும் 8(ஆ) பணிப்புரைக்கமைய ஒவ்வொரு மூன்று மாதங்களின்போதும் குழு நிறைவேற்றும் நடவடிக்கைகளும் சம்பந்தமான அறிக்கைகள் குழுவால் அமைச்சருக்கு வழங்கப்பட வேண்டுமாயினும், அப்பணிப்புரையின்படி நடவடிக்கைகளை மேற்கொண்டதற்கான தகவல்கள் கணக்காய்வில் உறுதி செய்யப்படவில்லை.

இது தொடர்பாக 2019 பெப்ரவரி 20 ஆந் திகதி இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் பொதுச் செயலாளரால் விளையாட்டுத் துறை அதிகாரச்சட்டம் மற்றும் தேசிய ஒலிம்பிக் குழுவினது சுயாதீனம் சம்பந்தமாக சட்டமா அதிபரின் கருத்துரையைக் கோரியுள்ளதாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) விளையாட்டுத்துறைச் சங்கத்திற்குப் பணம் வழங்குதல்**

(i) விளையாட்டுத் துறைச் சங்கத்தினது கடிதத் தலைப்பினூடாக நிதியைக் கோராமை, சர்வதேச அங்கத்துவக் கட்டணத்தைக் கொடுப்பனவு செய்ததை உறுதி செய்யும் ஆவணங்களைச் சமர்ப்பிக்காமை, வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம், கணக்காய்வு செய்யப்பட்ட முன்னைய ஆண்டினது கணக்குகள் மற்றும் முன்னைய ஆண்டினது செயலாற்றல் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாமை போன்ற காரணங்கள்ால் மீளாய்வாண்டின்போது சர்வதேச ஒலிம்பிக் குழுவானது அங்கத்துவச் சங்கங்களுக்கு இடையே வழங்குவதற்கென குழுவிற்கு வழங்கிய ரூபா 3,297,111 கூட்டுத் தொகை 15 தேசிய விளையாட்டுத்துறை சங்கங்களுக்கிடையே விநியோகிக்கப்படவில்லை.

(ii) இலங்கை ஹொக்கி சம்மேளனம் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ஹொக்கி போட்டிகளை நடாத்துவதற்கு சர்வதேச ஒலிம்பிக் குழு 18,300 அமெரிக்க டொலர் (ரூபா 2,421,830) முற்பணமாக தேசிய ஒலிம்பிக் குழுவிற்கு வழங்கியிருந்தது. இலங்கை ஹொக்கி சம்மேளனத்தின் உத்தியோகத்தர் தெரிவு நடைபெறாமையால் அச்சம்மேளனத்தின் நடவடிக்கைகள் விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டிருந்ததுடன், சம்மேளனத்தின் நடவடிக்கைகள் இடைக்கால நிர்வாகக் குழுவால் நடைபெறுவதால் இவ்வுதவிப் பணம் ஹொக்கி சம்மேளனத்திற்கு வழங்கப்படவில்லை. ஹொக்கி போட்டிகளை நடாத்துவதற்கு வழங்கப்படாது போன நிதி தொடர்பாக விளையாட்டுத் துறை அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிப்பதற்கேனும் குழு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை.

**4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குழுவால் வெளியிடப்பட்ட ஊழியர் கடன் தொடர்பான சட்டங்கள் மற்றும் பிரமாணத் தொகுப்பு என்பன குழுவின் நிறைவேற்றுக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின்போது சேவையிலிருந்து விலகிய குழுவின் 03 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 692,860 கடனும் அதற்கான ரூபா 43,874 வட்டியும் 2018 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

(ஆ) பொருட் கொள்வனவு நடைமுறைகளைக் கடைப்பிடிக்காதும் நிறைவேற்றுக் குழுவின் அங்கீகாரம் இன்றியும் உள்ளூரில் கொள்வனவுகளை மேற்கொள்ளக்கூடிய வாய்ப்பு உள்ளதா என்பதை ஆராயாமலும் விளையாட்டு வீரர்களதும் வீராங்கனைகளதும் தரவுகளைச் சேகரித்து தகவல்களைத் தயாரிப்பதற்கு அமெரிக்காவின் நியூயோர்க்கில் உள்ள மதியுரை நிறுவனம் ஒன்றிடமிருந்து 30,000 அமெரிக்க டொலர்களுக்கு மென் அணியொன்றைக் கொள்வனவு செய்வதற்கு 2014 நவெம்பர் 14 ஆந் திகதி உடன்படிக்கை ஒன்று செய்து கொள்ளப்பட்டது. இதன் பொருட்டு சர்வதேச ஒலிம்பிக் குழுவிடமிருந்து பெறப்பட்ட 30,000 அமெரிக்க டொலர்களில் 22,500 அமெரிக்க டொலர்கள் 2015 ஆம் ஆண்டிலும் 7,500 டொலர்கள் மீளாய்வாண்டிலும் மதியுரை நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. மென் அணியினது பராமரிப்பு மற்றும் சேவைகளுக்கான நடவடிக்கைகள், மென் அணியை

நிறுவி அதனை நடாத்திச் செல்லும் நிறுவனம், எதிர்காலத்தில் மென் அணியில் ஏற்படக்கூடிய மாற்றங்கள், மென் அணியை வழங்கிய நிறுவனம் மூடப்படுமிடத்து வசதிகளை எவ்வாறு பெறலாம் போன்ற விடயங்கள் ஒலிம்பிக் குழுவிற்கும் சேவை வழங்குனருக்கும் இடையேயான கொள்வனவு உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. 2017 - 2018 காலப்பகுதிக்கான, உடன்படிக்கையுடன் தொடர்பற்ற, வருடாந்த பராமரிப்பு மற்றும் நாளதுவரையாக்கல் நடவடிக்கைகளுக்கு 7,500 அமெரிக்க டொலர்கள் அறவிடப்பட வேண்டியுள்ளதாக மதியுரை நிறுவனம் 2018 ஏப்ரல் 04 ஆந் திகதி தேசிய ஒலிம்பிக் குழுவிற்கு அறிவித்திருந்தது. இக்கட்டணம் செலுத்தப்படாமையால் மதியுரை நிறுவனம் 2018 ஆகஸ்ட் 14 ஆந் திகதி மென் அணியைச் செயலற்றதாக்கியிருந்தது. மேலும், இக்காலப்பகுதியின்போது சகல விளையாட்டு வீரர்களதும் தரவுகள் சேகரிக்கப்பட்டு தகவல்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பொருட் கொள்வனவு வழிகாட்டலைக் கடைப்பிடிக்காது தெரிவு செய்யப்பட்ட குத்தகையாளர் ஒருவருக்கு குழுவுக்குரிய உணவகம் 2016 நவம்பர் 01 தொடக்கம் 05 ஆண்டுகளுக்குத் தனியார் கம்பனிக்குக் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் முதல் 3 ஆண்டுகளுக்கும் குத்தகையாக மாதாந்தம் ரூபா 360,000, 4 ஆம் ஆண்டில் ரூபா 375,000, 5 ஆம் ஆண்டில் ரூபா 390,000 என குத்தகையாளரால் மாதாந்தம் செலுத்தப்பட வேண்டும். குத்தகையாளருடன் 2017 சனவரி 27 ஆந் திகதி செய்து கொள்ளப்பட்ட குத்தகை உடன்படிக்கைகள் பதிவு செய்யப்படுவதற்காக 2017 பெப்ரவரி 08 ஆம் திகதி காணிப் பதிவாளர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்தபோதும், 2017 ஏப்ரல் 12 ஆந் திகதி காணிப் பதிவாளர் பதிவு செய்வதை நிராகரித்திருந்தார். குழுவால் பெறப்பட்ட மதுபான விற்பனை அனுமதிப்பத்திரம் உணவகத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பிப்பதற்கு மீளாய்வாண்டின்போது ரூபா 998,500 மற்றும் அனுமதிப்பத்திர இடைநிறுத்தல் / இரத்துச் செய்தல் அறிவிப்பின் பொருட்டு இணக்கக் கட்டணமாக 2016 ஆம் 2018 ஆம் ஆண்டுகளில் ரூபா 133,200 குத்தகையாளரிடமிருந்து பெறப்பட்டு மதுவரித் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. இக்கொடுப்பனவு குழுவின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படவில்லை.

(ஈ) குழுவால் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த உணவகம் மற்றும் தேகாப்பியாச நிலையம் அடங்கலான கட்டிடம் முழுவதற்கும் ஒரு மின்சார மீட்டரே பயன்படுத்தப்பட்டிருந்தது. வெவ்வேறு மின்சார மீட்டர்கள் பொருத்தப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின்போது மின்சாரச் செலவினமாகிய ரூபா 4,412,446 இம் மூன்று பிரிவுகளுக்குமிடையே பகிர்ந்தளிக்கப்பட்டபோதும், அச்செலவினத்தை கணிப்பிடும் பட்டோலை எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(உ) வருடாந்த பொருட் கொள்வனவுச் சபையால் கைதவிர்ப்புச் செய்யப்படுவதற்கென பரிந்துரை செய்யப்படாத மற்றும் முறையான மதிப்பீட்டு அறிக்கை பெறப்படாத ரூபா 10,519,450 கிரயமுடையதும் முற்றாக Eயத்திற்குள்ளானதுமான 13 தேகாப்பியாச உபகரணங்கள் 2016 ஆம் ஆண்டில் குழுவிற்குச் சொந்தமான தேகாப்பியாச அபிவிருத்தித் தனியார் நிறுவனம் ஒன்றிற்குக் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இதற்கென அந்நிறுவனம் ஓராண்டு தாமதத்தின் பின்னர் குழுவிற்கு வழங்கிய தொகை ரூபா 300,000 மாத்திரமே. இதன் காரணமாக, குறித்த உபகரணங்களைக் கைதவிர்ப்புச் செய்வதன் மூலம் பெறக்கூடியதாகவிருந்த சாதகமான நிலைமை இல்லாது போனது. இதற்குப் புறம்பாக, குழுவிற்குச் சொந்தமானதும் முற்றாக Eயத்திற்குள்ளானதுமான 09 ஆண்டுகள் பழமை வாய்ந்ததும் ரூபா 9,898,727 கிரயமுடையதுமான 26 தேகாப்பியாச உபகரணங்கள் கட்டணமெதுவுமின்றி தேகாப்பியாச நிலையத்தை நடாத்தும் தனியார் நிறுவனத்தின் பாவனைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஊ) தேசிய ஒலிம்பிக் குழுவினது அறிக்கை ஒன்றின் பிரகாரம் (Olympic Games Subsidies) 2016 ஆம் ஆண்டில் நடைபெற்ற ரியோ ஒலிம்பிக் விழாவில் பங்குபற்றுவதற்கு குழுவின் தலைவருக்கும் தலைமைச் செயலாளருக்கும் பயணச் செலவினமாகவும் தங்குமிடச் செலவினமாகவும் 10,000 அமெரிக்க டொலர்கள் (இலங்கை ரூபா 1,425,159) வீதப்படி அந்த உத்தியோகத்தர்களுக்கு 2016 மார்ச் 14 ஆந் திகதி கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கையில், குழுவால் தலைவருக்கு ரூபா 791,690 மற்றும் தலைமைச் செயலாளருக்கு ரூபா 1,064,018 என 2016 ஆம் ஆண்டின்போது செலவிடப்பட்டிருந்தது. பின்னர், ஏற்கனவே பெற்றிருந்த பணத்தை தம்வசம் வைத்திருந்த உத்தியோகத்தர்கள் அதனை 2017 ஏப்ரல் 06 மற்றும் 2017 டிசெம்பர் 04 ஆந் திகதிகளில் குழுவில் திருப்பியளித்திருந்தனர்.

**4.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 ஆம் ஆண்டின்போது இலங்கை ஒலிம்பிக் குழுவின் 75 ஆம் ஆண்டு நிறைவுடன் ஒருசேர ரூபா 5,200,000 க்கு 2000 "ஞாபகார்த்த புத்தகங்களை" அச்சிட்டு வழங்குவதற்கு பொருட் கொள்வனவு நடைமுறைகளிலிருந்து விலகியவாறு தனியார் நிறுவனம் ஒன்று தெரிவு செய்யப்பட்டு உடன்படிக்கையின்றி ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. அப்பணிக்கு 2013 செப்டெம்பர் 30 ஆந் திகதி ஒப்பந்தப் பெறுமதியில் 50 சதவீதமான ரூபா 2,600,000 முற்பணமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. முன்னைய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் மூலம் இவ்விடயம் சுட்டிக்காட்டப்பட்டபோதும், 2018 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலேனும் அப்பணியை ஈடேற்றுவதற்கு அல்லது முற்பணத்தை ஒப்பந்தகாரரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. "இது சம்பந்தமாக இலங்கை ஒலிம்பிக் குழு 2019 ஆம் ஆண்டில் நடாத்தும் 80 ஆம் ஆண்டு நிறைவு விழா ஞாபகார்த்த புத்தக அச்சிடலின்போது இம்முற்பணத்தை எதிரீடு செய்ய எண்ணியுள்ளதாக குழுவின் பொருளாளர் கணக்காய்விற்கு தெரிவித்திருந்தார்."

(ஆ) தொகுதி உபகார மானியச் செயற்திட்டத்தின் கீழ் இலங்கை கூடைப்பந்து சம்மேளனம் தனியார் நிறுவனம் ஒன்றிடமிருந்து கொள்வனவு செய்த ரூபா 153,450 பெறுமதியான உடைகளின் பொருட்டு குழுவிற்குச் சமர்ப்பித்திருந்த அந்த தனியார் நிறுவனம் வழங்கிய 3 இன்வொய்சுகளில் இடப்பட்ட கையெழுத்து ஒன்றுக்கொன்று முரண்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இதற்கான கொடுப்பனவை உறுதி செய்யும் பில்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**4.4 பதவியணி நிர்வாகம்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) ஆட்சேர்ப்பு நடைமுறை**

---

ஒலிம்பிக் குழுவின் பதவியணிக்கான நிறைவேற்று குழுவினது அங்கீகாரம் பெறப்பட்ட முறையான ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்படவில்லை.

**(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணி**

---

(i) குழுவினது பதவியணி நிறைவேற்று குழுவால் அங்கீகரிக்கப்படவில்லை.

(ii) பிரதான செயற்பாட்டு உத்தியோகத்தர், நிதி மற்றும் நிர்வாக முகாமையாளர், சர்வதேச நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர், செயற்பாட்டு முகாமையாளர் போன்ற பிரதான பதவிகள் உள்ளடங்கலான 07 பதவிகள் 02 ஆண்டுகளுக்கு மேலாக வெற்றிடமாக இருந்தன.

### 4.5 இனங்காணப்பட்ட இழப்புகள்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு முறையாக பணத்தை அனுப்பாமையால் 3 சந்தர்ப்பங்களில் தண்டப்பணமாக ரூபா 3,154 குழுவினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல் நடவடிக்கைத் திட்டம்

நிதிசார் மற்றும் பௌதீக இலக்குகள் காலவரையறைக்குட்பட நிறைவேற்றப்படுதலை உறுதி செய்வது மற்றும் ஏற்பாடு செய்யப்பட்ட நிதி பயனுள்ளவாறு பயன்படுத்தப்படுவதை அதிகரிப்பதற்குமாக ஆண்டின் இறுதியில் பொறுப்பை வெளிப்படுத்துமாறான பாதீட்டின் அடிப்படையில் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டுமாயினும், அவ்வாறானதொரு திட்டம் தயாரிக்கப்படவில்லை.

### 5.2 கூட்டிணைந்த திட்டம்

குழுவினது எதிர்காலப் போக்கைத் தீர்மானிக்கும் வழிவகைகளை கூட்டிணைந்த திட்டம் கொண்டிருக்க வேண்டுவதுடன், உள்ளவாறான செயலாற்றல் நிலையான இலக்கை நோக்குமாறு சரியானதும் அடையக் கூடியதுமான இலக்கை உள்ளடக்கியவாறான கூட்டிணைந்த திட்டத்தைக் குழு தயாரிக்கவில்லை.

### 5.3 உள்ளகக் கணக்காய்வு

குழுவினது நடவடிக்கைகள் சம்பந்தமாக மீளாய்வாண்டின்போது உள்ளகக் கணக்காய்வு நடைபெறவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகளிலும் கட்டுப்பாடுகளிலும் உள்ள குறைபாடுகள் அவ்வவ்போது குழுவின் தலைவரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமை | குறைபாடு |
| --- | --- |
| (அ) கணக்கீடு | (i) வருமானத்தை செலவினத்தில் எதிரீடு செய்தமை |
| | (ii) நிலையான சொத்துக்களைக் கணக்கிலிடாமை. |
| (ஆ) பதவியணி நிர்வாகம் | (i) ஆட்சேர்ப்பு நடைமுறையை அங்கீகரித்துக் கொள்ளாமை |
| | (ii) வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| (இ) நிதிக் கட்டுப்பாடு | (i) செயற்திட்டத்திற்கென விளையாட்டுத் துறைச் சங்கங்களுக்கு வழங்கிய பணம் செலவிடப்பட்டமையைப் போதியளவு மேற்பார்வையிடாமை |

| | | | |
|---|---|---|---|
| | | (ii) | நிலுவையாகவுள்ள ஊழியர் கடனை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கை மேற்கொள்ளாமை |
| (ஈ) | பொருட் கொள்வனவுக் கட்டுப்பாடு | | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையைக் குழு கொள்வனவின் பொருட்டு கடைப்பிடிக்காமை. |